ஆட்சியருடைய அறிக்கைகள் பெறப்பட்டு, புதிய வட்டங்கள் உருவாக்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்பட்டு, உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

**[குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### இலங்கை அரசின் தமிழின அழிப்பினைக் கண்டித்து, சர்வதேச பொது விசாரணை கோரியும் மத்திய அரசின் நிலைப்பாட்டைக் கண்டித்தும் கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் போராட்டம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இலங்கை அரசின் தமிழின அழிப்பினைக் கண்டித்து, சர்வதேச பொது விசாரணை கோரியும், மத்திய அரசின் நிலைப்பாட்டைக் கண்டித்தும், தமிழகம் முழுவதுமுள்ள கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் நடத்திவரும் போராட்டம் குறித்தும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் திரு. மு.க. ஸ்டாலின், திரு. துரைமுருகன், திரு. எ.வ. வேலு, திரு. அர. சக்கரபாணி, முனைவர் கோவி. செழியன், திரு. டி.ஆர்.பி. ராஜா, திரு. கா. ராமச்சந்திரன் ஆகியோர் சட்டமன்றப் பேரவை விதி 56–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இந்திய கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்ட்) கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. அ. சவுந்தரராசன், செல்வி கே. பாலபாரதி, திரு. க. பாலகிருஷ்ணன் ஆகியோர் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இந்திய கம்யூனிஸ்டு கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. சு. குணசேகரன், திரு. கே. உலகநாதன், திரு. ந. நஞ்சப்பன், திரு. பி.எல். சுந்தரம், திரு. கு. லிங்கமுத்து, திரு. வெ. பொன்னுப்பாண்டி, மனித நேய மக்கள் கட்சியைச் சார்ந்த முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, புதிய தமிழகம் கட்சியைச் சார்ந்த டாக்டர் க. கிருஷ்ணசாமி மற்றும் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் ஆகியோரும் சட்டமன்றப் பேரவை விதி 55–ன்கீழ் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். பாட்டாளி மக்கள்

2013 மார்ச் 27] [பேரவைத் தலைவர்]

கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள் இதுசம்பந்தமாக தற்போதுதான் அறிவிப்புக் கொடுத்துள்ளார். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்கிறேன். இதுகுறித்து அறிவிப்புக் கொடுத்தவர்கள் கட்சிக்கு ஒருவர் என்ற முறையில் சுருக்கமாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வரலாம். முதலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.

முற்பகல் 11–15

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் கவன ஈர்ப்புத் தீர்மானத்தின்மூலம் இந்த அரசினுடைய கவனத்தை ஈர்ப்பதற்கான வாய்ப்பினை எனக்கு வழங்கிய அன்புத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் சட்டமன்றக் கட்சித் தலைவர் டாக்டர் தளபதி அவர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழகத்தில் நிலவுகிற ஈழத் தமிழர்கள் தொடர்பான பிரச்சினையில் படிக்கின்ற மாணவர்கள் எந்த அளவுக்குப் பாதிக்கப்பட்டு, சாலையில் நின்று போராடுகிறார்கள் என்பதை இந்த அவையில் உள்ள எல்லோரும் நன்றாக அறிவார்கள். மாணவர்கள் ஆர்ப்பாட்டம், உண்ணாவிரதம், சாலை மறியல், இரயில் மறியல் என்ற நிலையைக் கையாண்டு, தமிழக மக்களுடைய கவனத்தை ஈர்த்திருக்கிறார்கள், அகில இந்திய அளவில் அதை உணர்ந்தும் இருக்கிறார்கள். பொதுவாக, போராட்டம் என்று சொன்னால், கலைக் கல்லூரி மாணவர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள்தான் வீதியில் வந்து போராடுவார்கள். ஆனால், ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாக, இன உணர்வு அடிப்படையில், நடவடிக்கைக்குட்பட வேண்டுமென்று மிரட்டப்படுகிற தனியார் கல்லூரி மாணவர்கள்கூட, மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மாணவர்கள்கூட இன்றைக்கு வீதியில் நின்று போராடுகிற சம்பவங்களைத் தினசரி நாடு பார்த்துக்கொண்டு இருக்கிறது. ** (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் சிறப்புக் கவன ஈர்ப்பில் சுருக்கமாகப் பேச வேண்டும்; குற்றச்சாட்டு சொல்லிப் பேசக்கூடாது. (குறுக்கீடு)

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2013 மார்ச் 27

*மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்: *இந்தப் பிரச்சினைக்குக் காரணமே நீங்கள்தான். நீங்கள் அடுத்தவர்களைக் குற்றஞ்சாட்டி சொல்கிறீர்கள். (குறுக்கீடு)*

**மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இந்தப் பிரச்சினையில் அரசினுடைய கவனத்தை மட்டும் ஈர்த்துப் பேசுங்கள். குற்றச்சாட்டு சொல்லிப் பேசக்கூடாது. சிறப்புக் கவன ஈர்ப்பு சம்பந்தமாகப் பேசுங்கள். (குறுக்கீடு) அவர் கூறிய குற்றச்சாட்டு அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

*மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்தில் பேசுகின்றபோது, என்ன பிரச்சினை என்பது குறித்து அரசின் கவனத்தை ஈர்த்து அமரவேண்டும். தேவையில்லாத பிரச்சினைக்குள்ளே போய் வாங்கிக் கட்டிக்கொள்ள வேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசின் கவனத்தை ஈர்த்துப் பேசுங்கள்.*

**முனைவர் கோவி. செழியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன், நீங்கள் ** சம்பந்தமாகப் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. நீங்கள் அரசின் கவனத்தை ஈர்த்துப் பேசுவதாக இருந்தால், பேசுங்கள். இல்லையென்றால் உட்காருங்கள். (குறுக்கீடு)*

**முனைவர் கோவி. செழியன்:** *மாணவர்களுடைய உணர்வை அரசு உணரவேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறோம். ஐ.நா. சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் ஒரு சில திருத்தங்கள் தேவை என்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள் வரையறை செய்துள்ளார். அது எல்லோருக்கும் தெரியும். அதையொட்டி ** எனவே, இந்த நேரத்தில் (குறுக்கீடு)*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

முற்பகல் 11–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் கோவி. செழியன், அவையின் கவனத்தை ஈர்த்து உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** அவர், ஏதோ சொல்லி, ‘அதையொட்டி’ என்று சொன்னார். ‘அதையொட்டி’ என்று அவர் பேசிய வார்த்தைகளை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பேசியவை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டன. (குறுக்கீடுகள்) திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அவர் எங்கே சப்ஜெக்ட்டுக்குள் பேசுகிறார்? வேறு எதையோ பேசுகிறார். அரசின் கவனத்தை ஈர்க்காமல் பேசுகிறார். (குறுக்கீடு) அவரை அரசின் கவனத்தை ஈர்க்கச் சொல்லுங்கள். குற்றஞ்சாட்டி எல்லாம் பேசக்கூடாது. (குறுக்கீடுகள்) அவரை, அரசின் கவனத்தை ஈர்த்து, உட்காரச் சொல்லுங்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** எனவே, மத்திய அரசாங்கத்தை வலியுறுத்தி, திருத்தத் தீர்மானங்களை இந்த அவையில் நிறைவேற்ற வேண்டுமென்பதை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் நான் கேட்டுக்கொள்கிறேன். **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். முனைவர் கோவி. செழியன், அரசின் கவனத்தை ஈர்த்துவிட்டு உட்காருங்கள். (குறுக்கீடு) அரசின் கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லிவிட்டு உட்காருங்கள்.

**முனைவர் கோவி. செழியன்:** அதற்காவது அனுமதியை எனக்கு கொடுங்கள். அந்த மாணவர்கள் . . .

---

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

[2013 *மார்ச்* 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) முனைவர் கோவி. செழியன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் சப்ஜெக்ட்டுக்குள் பேசாமல், வேறு எங்கோ போகிறார். சப்ஜெக்ட்டைப் பேசி முடிக்க வேண்டும். அவர் அதை விட்டு வேறு எங்கோ போய்க்கொண்டிருக்கிறார்.*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரும்பத் திரும்ப அரசினுடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய பிரச்சினைப் பற்றிக் கூறாமல், அதற்கு வெளியே சென்று தனிப்பட்ட முறையில் அவர்கள் பேசிய அனைத்துப் பேச்சுகளையும் அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தேவையில்லாமல் பேசுபவர்களுக்கு நேரத்தைக் கொடுத்து, நாம் ஏன் நேரத்தை வீணடிக்க வேண்டும்? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த உறுப்பினரைப் பேசுவதற்கு அழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *முனைவர் கோவி. செழியன், நீங்கள் சொன்ன அத்தனை குற்றச்சாட்டுகளும் நீக்கப்படுகின்றன. திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அத்தனை குற்றச்சாட்டுகளும் நீக்கப்படுகின்றன.*

*****திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித சமூகமே வெட்கித் தலைகுனியும் அளவிற்கு இலங்கையிலுள்ள தமிழர்கள். . . (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *முனைவர் கோவி. செழியன், உட்காருங்கள். பேச வாய்ப்புக் கொடுத்ததை சரியாகப் பயன்படுத்தவில்லையென்றால் நான் என்ன செய்வது? உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேச வாய்ப்புக் கொடுத்தால், அதைச் சரியாக நீங்கள் பயன்படுத்தாமல், வேறெதையோ பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? உட்காருங்கள். கவன ஈர்ப்பு என்றால், கவன ஈர்ப்பு குறித்துத்தான் பேச வேண்டும். அரசினுடைய கவனத்தைத்தானே ஈர்க்க வேண்டும்? வேறு என்னென்னவோ பேசுகிறார்.*

2013 மார்ச் 27] [பேரவைத் தலைவர்]

திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) என்ன பொருளோ, பொருளைப் பற்றிப் பேசாமல், வேறு எதையோ பற்றிப் பேசினால் எப்படி? (குறுக்கீடுகள்) விதிகளின்படிதான் பேச வேண்டும். விதிகளை விட்டுவிட்டு, வேறு எதையோ பற்றிப் பேசினால் நான் எப்படி அனுமதிக்க முடியும்? (குறுக்கீடுகள்) பேசுவதற்கு அவருக்கு அளிக்கப்பட்ட அனுமதியை, வாய்ப்பை அவர் சரியாக, முறையாகப் பயன்படுத்தவில்லை. அதனால், அடுத்த உறுப்பினரைப் பேச நான் அழைத்துவிட்டேன். (குறுக்கீடுகள்) நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவருக்கு வாய்ப்புக் கொடுத்தேன். அந்த வாய்ப்பை அவர் சரியாகப் பயன்படுத்தவில்லை. திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித சமூகமே வெட்கித் தலை குனியும் அளவிற்கு இலங்கையிலுள்ள தமிழ் மக்கள்மீது, இலங்கை இராணுவம் தொடர்ந்து சொல்லொணாத கொடுமைகளை இழைத்து வருவதை உலகமே அறியும். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேச வாய்ப்புக் கொடுத்தேன். அவர் சரியாக அதைப் பயன்படுத்தவில்லை. (குறுக்கீடுகள்) திரும்பத் திரும்ப அதையே பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) உட்காருங்கள், திரு. க. பாலகிருஷ்ணன் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறார்கள் அல்லவா? நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவருக்குத்தான் பேச வாய்ப்புக் கொடுத்தேன். அவர் வேறு என்னென்னவோ பேசிக்கொண்டிருக்கிறார். அவர் அரசினுடைய கவனத்தை ஈர்க்காமல், வேறு எதையாவது பேசும்போது, நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) முனைவர் கோவி. செழியனுக்கு இரண்டு நிமிடம் வாய்ப்புத் தருகிறேன். அரசினுடைய கவனத்தை ஈர்த்து அமரும்படி கேட்டுக்கொள்கிறேன். வேறு ஏதாவது புதுப் பிரச்சினை பற்றிப் பேசினால், திரும்பவும் அவரை நான் உட்கார வைத்துவிடுவேன். விவாதத்திற்கு அனுமதி கிடையாது. அரசின் கவனத்தை ஈர்ப்பதற்கு மட்டும்தான்.

**முனைவர் கோவி. செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தக் குற்றச்சாட்டையும் சொல்லாமல், மாணவர்களிடம் இருக்கக்கூடிய உணர்வை வெளிப்படுத்தி அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டுமென்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய எண்ணம் (குறுக்கீடுகள்) ஆனால், . . . ,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதைச் சொல்லி உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற பிரச்சினை தொடர்பாக அரசின் கவனத்தை ஈர்க்க வேண்டும். புதிய பிரச்சினை குறித்துப் பேசாதீர்கள்.*

**முனைவர் கோவி. செழியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்களிடம் ஏற்பட்டிருக்கிற எழுச்சி ஏதோ அரசியல் ரீதியான எழுச்சி என்று யாரும் கருதிவிட முடியாது. இங்கிருப்பவர்களும் சரி, அங்கிருப்பவர்களும் சரி. இன உணர்வின் அடிப்படையில் எழுப்பப்பட்ட ஒரு பிரச்சினை. எனவே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,* **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அரசினுடைய கவனத்தை ஈர்க்கிறேன் என்று சொல்லி, உட்காருங்கள்.*

**முனைவர் கோவி. செழியன்:** **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணையுடன் பரிந்துரைத்த வாய்ப்பை மீண்டும், மீண்டும் அவர் தவறாகப் பயன்படுத்திக்கொண்டிருக்கிறார். ஆகவே, அவர் பேசியவற்றை அவைக் குறிப்பிலிருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அடுத்த, உறுப்பினரைப் பேச அழைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*முற்பகல் 11–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் அவர்களைக் கூப்பிட்டிருக்கிறேன், நீங்கள் உட்காருங்கள். இதிலே* point of order *என்ன இருக்கிறது? சிறப்புக் கவன ஈர்ப்பில் பேசிக் கொண்டிருக்கும்போது* point of order *என்ன இருக்கிறது? (குறுக்கீடுகள்)* Point of order *எல்லாம் இதிலே கிடையாது. (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பில் பேசிக் கொண்டிருக்கிறீர்கள்.*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2013 மார்ச் 27] [பேரவைத் தலைவர்]

(குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பு எடுத்துக் கொண்டிருக்கிறோம். உங்கள் உறுப்பினருக்குப் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தேன்; அவர் சரியாகப் பேசவில்லை. முதலமைச்சரும் வாய்ப்புக் கொடுக்கப் பரிந்துரைத்து, அந்த வாய்ப்பையும் அவர் சரியாகப் பயன்படுத்திக்கொள்ளவில்லை. இதற்கு மேலும் நீங்கள் இதில் point of order என்றால் எப்படி? (குறுக்கீடுகள்)

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** தலைவரின் தீர்ப்புக்குப் பின்னர் point of order வராது. (குறுக்கீடுகள்) எதிலே point of order raise பண்ணுகிறார்? பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் தீர்ப்புக்குப் பின்னர் point of order எழுப்ப அவருக்கு உரிமை கிடையாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்னுடைய தீர்ப்பின்மீது நீங்கள் பேச முடியாது. உறுப்பினர் முனைவர் கோவி. செழியனை நான் உட்காரச் சொல்லிவிட்டேன். திரு. க. பாலகிருஷ்ணன் அவர்களைக் கூப்பிட்டுவிட்டேன். நீங்கள் இதற்கு மேலே raise பண்ண வேண்டியதில்லை. (குறுக்கீடுகள்) இந்தப் பொருள் குறித்து மட்டும் நீங்கள் பேசியிருக்கலாம். அவருக்கு வாய்ப்புக் கொடுக்கப்பட்டும் பேசவில்லை, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன் பேசட்டும். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பு எடுத்திருக்கிறேன், இன்றைக்கு நேரமில்லை. பின்னர், பொது விவாதத்தில் 11 உறுப்பினர்கள் பேச வேண்டும். இதற்கு மேலும் பேசுவதற்கில்லை. திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அதெல்லாம் ஒன்றுமில்லை, திரு. அர. சக்கரபாணி, உட்காருங்கள். முனைவர் கோவி. செழியன் அவர்கள் அரசின் கவனத்தை ஈர்த்துவிட்டார். (குறுக்கீடுகள்) முன்னாலேயே சொல்லிவிட்டார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. அர. சக்கரபாணி, உட்காருங்கள். இப்படியே பேசிக்கொண்டிருந்தால் எப்படி? இது சரியல்ல, முறையல்ல. நான் உங்களுக்கு நிறைய வாய்ப்புக் கொடுத்தேன் (குறுக்கீடுகள்) இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ள உங்களுக்கு வாய்ப்புக் கொடுத்து அவைக்குள் வரச் சொல்லியிருக்கிறோம். நீங்கள் அதையும் மீறி, அந்தப் பெருந்தன்மையை மீறி, இப்படிச் செய்து கொண்டு இருப்பது முறையல்ல. சரியல்ல. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மற்ற உறுப்பினர்கள் உட்காருங்கள், உங்களுக்கு வாய்ப்பு இல்லை. (குறுக்கீடுகள்)

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள்மீது தொடர்ந்து நடத்தப்பட்டு வரும் தாக்குதலைக் கண்டித்து மத்திய அரசு அதன்மீது உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்திப் போராடிக் கொண்டிருக்கிற. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், உட்காருங்கள். நீங்கள் செய்வது முறையல்ல. (குறுக்கீடுகள்) இப்படிச் செய்தால் எப்படி? (குறுக்கீடுகள்) நான் வாய்ப்புக் கொடுத்தேன். கொடுத்த வாய்ப்பை உறுப்பினர் பயன்படுத்தவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும் வாய்ப்புக் கொடுக்கப் பரிந்துரைத்தார்கள். இதற்கு மேலும் நீங்கள் அந்த வாய்ப்பைப் பயன்படுத்தவில்லை என்றால் நான் என்ன செய்வது? நீங்கள் குற்றச்சாட்டு சொல்லி பேசிக் கொண்டிருந்தால் சிறப்புக் கவன ஈர்ப்பை எப்படி நிறைவு செய்வது? (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பை எடுத்துக்கொண்டு இந்தமாதிரி பேசிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? (குறுக்கீடுகள்) இது முறையா? இதற்கு முன்னால் இந்த மாதிரி எல்லாம் நடந்திருக்கிறதா? (குறுக்கீடுகள்) ஏன் இப்படி நடக்கிறீர்கள்? இது முறையல்ல, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் திரும்பத் திரும்பச் சொல்லியும். அவர் அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வந்த பிரச்சினை குறித்து பேசி அமர்வதற்குப் பதிலாக, பிரச்சினையை வேறு திசையில் திருப்புவதற்காக முயற்சி செய்து கொண்டிருக்கிறார். இதைத் தவிர்க்க வேண்டும். (குறுக்கீடு) என்ன சொல்ல வருகிறீர்கள் நீங்கள் என்பதை நாங்கள் புரிந்துகொண்டோம். பொறுமையாக இருங்கள். அதற்குரிய விளக்கங்களை, நீங்கள் கேட்ட விளக்கங்களை மாண்புமிகு இதய தெய்வம் முதலமைச்சர் அம்மா அவர்கள் விளக்கமாகக் கூறுவார்கள், பொறுமையாக இருந்து கேளுங்கள்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் எழுந்து நின்று பேசிக் கொண்டேயிருந்தார்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அன்பழகன், இது முறையல்ல. உட்காருங்கள். உறுப்பினர்கள் பொறுமையாக இருங்கள். (குறுக்கீடு) அனுமதி இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், நான் உங்களை அனுமதிக்கவில்லை.

2013 *மார்ச்* 27] [பேரவைத் தலைவர்]

*நீங்கள் எழுந்து நின்று உங்கள் போக்குக்குப் பேசக்கூடாது, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இந்த மாதிரிப் பேசுவது முறையல்ல. (குறுக்கீடுகள்) மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

*முற்பகல் 11–30*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் பலமுறை பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தும் அவர் பேசுவதற்கு முயற்சி செய்யவில்லை. பிரச்சினையை வேறு திசையில் கொண்டு செல்கிறார். ஆகவே, முழுமையாக அவர்களுக்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டாம். அடுத்த உறுப்பினர் பேசுவதற்கு, நீங்கள் வாய்ப்புக் கொடுங்கள். (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசலாம், நான் உங்களை பேச அழைத்துவிட்டேன்.*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கை தமிழர்கள்மீது தொடர்ந்து ராஜபக்சே அரசாங்கத்தால் தொடுக்கப்பட்டுவரும் தாக்குதலைக் கண்டித்து மாணவர்கள் நடத்திவரும் போராட்டம் குறித்து தமிழக அரசினுடைய. . . (குறுக்கீடுகள்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று பேச முற்பட்டனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இப்படியெல்லாம் செய்வது முறையில்லை. (குறுக்கீடுகள்) சிறப்புக் கவன ஈர்ப்பில் இப்படி எல்லோரும் எழுந்திருந்து பேசுவது முறையில்லை. (குறுக்கீடுகள்) உங்கள் உறுப்பினர் பேசுவதற்கு வாய்ப்புக் கொடுத்தேன், ஆனால், அவர் பேசவில்லை. இப்படி எல்லோரும் எழுந்திருந்து பேசுவது முறையில்லை. ஒருவருக்கு ஒருமுறைதான் வாய்ப்புக் கொடுக்கப்படும். இப்படி எல்லோரும் எழுந்து பேசினால் எப்படி? மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வாய்ப்புக் கொடுத்தும், உறுப்பினர் வாய்ப்பை முறையாகப் பயன்படுத்தவில்லை. நீங்கள் எல்லோரும் எழுந்து நின்றால் எப்படி வாய்ப்புத் தருவது? (குறுக்கீடுகள்) கொடுக்கவேண்டிய வாய்ப்பு கொடுத்தாகிவிட்டது, இனி வாய்ப்பு இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)*

[2013 மார்ச் 27

**திரு. க. பாலகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். அளவுக்கு மீறி, இதுமாதிரி பேசிக்கொண்டிருந்தால் நான் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டி வரும், உட்காருங்கள். அனுமதியில்லை. (குறுக்கீடுகள்) உங்களுக்குப் பேசுவதற்கு நிறைய வாய்ப்புகள் கொடுத்துவிட்டேன். கொடுத்த வாய்ப்பை நீங்கள் முறையாகப் பயன்படுத்தவில்லை. (குறுக்கீடுகள்) முதலில், அவரவர் இருக்கையில் சென்று அமருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை என்றால் நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். (குறுக்கீடுகள்) அவர் முழுவதும் பேசிவிட்டார், பேசி அவையின் கவனத்தை ஈர்த்துவிட்டார். (குறுக்கீடுகள்) திரும்பவும் வாய்ப்புத் தர முடியாது. இப்படி நடந்துகொண்டால் சபையை என்னால் எப்படி நடத்தமுடியும்? இப்படி ஒவ்வொரு உறுப்பினரும் எழுந்திருந்து ரகளை செய்தால், சபையை எப்படி நடத்தமுடியும்? இது முறையில்லை. (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள், உங்கள் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) இல்லையென்றால் நான் நடவடிக்கை எடுக்கவேண்டி வரும். (குறுக்கீடுகள்) முதலில் அவரவர் இருக்கைக்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உங்களை நான் பேச அனுமதிக்கவில்லை. (குறுக்கீடுகள்) இந்தப் பிரச்சினை குறித்து மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலினும் கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். இதுசம்பந்தமாகப் பேசுவதாக இருந்தால் திரு. மு.க. ஸ்டாலின், உங்களை நான் பேச அனுமதிக்கிறேன். திரு. மு.க. ஸ்டாலின், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) அவர் சரியாக, அவரது வாய்ப்பைப் பயன்படுத்தவில்லை.

**திரு. மு.க. ஸ்டாலின்:** இது முறையில்லை. இது அந்த உறுப்பினரை அவமானப்படுத்துவதுபோன்று அமைந்துவிடும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, அந்த உறுப்பினர் அவரது வாய்ப்பை சரியாகப் பயன்படுத்தவில்லை. நீங்கள் இந்தத் தீர்மானம் குறித்துப் பேசுவதற்கு எழுதிக் கொடுத்திருக்கிறீர்கள். உங்களை நான் பேச அழைக்கிறேன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள். அவர்தான் பேசவேண்டுமென்பது என்ன கட்டாயம்? அவரது வாய்ப்பை அவர் சரியாகப் பயன்படுத்தவில்லை. அவருக்கு மேற்கொண்டு வாய்ப்புத் தருவதற்கு இல்லை. (குறுக்கீடுகள்) உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன்; நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

2013 மார்ச் 27] [பேரவைத் தலைவர்]

இல்லை, அந்த உறுப்பினருக்கு வாய்ப்புக் கொடுக்காமல் இருந்தால்தான் அது insult, உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் பேசுவதாக இருந்தால் பேசலாம். (குறுக்கீடுகள்) திரு. துரைமுருகன், உட்காருங்கள், உங்களுக்கு வாய்ப்பில்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இல்லை, இதுசம்பந்தமாக எதுவும் பேச வேண்டாம். திரு. துரைமுருகன், இங்கே பாருங்கள். சபையை நான் நடத்திக்கொண்டிருக்கிறேன். சபையை எப்படி நடத்தவேண்டுமென்று எனக்குத் தெரியும். பேரவை விதி 56–ன்கீழ் திரு. மு.க. ஸ்டாலினும் அறிவிப்பை எழுதிக் கொடுத்திருக்கிறார். அதனால், திரு. மு.க. ஸ்டாலினுக்கு வாய்ப்புத் தருகிறேன். திரு. மு.க. ஸ்டாலின், நீங்கள் பேசுங்கள். இங்கே பாருங்கள், நீங்களும்தான் விதி 56–ன்கீழ் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். நீங்கள் பேசுவதாக இருந்தால் பேசலாம். மற்றவருக்கு வாய்ப்புக் கொடுத்தேன், அவர்கள் அதைப் பயன்படுத்தவில்லை. அவருக்கு மீண்டும் வாய்ப்புத் தர முடியாது. நீங்கள் பேசுவதாக இருந்தால் பேசலாம். (குறுக்கீடு) திரு. மு.க. ஸ்டாலின் பேசுவதாக இருந்தால் பேசலாம். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், நீங்கள் உட்காருங்கள். மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர். (குறுக்கீடு) திரு. மு.க. ஸ்டாலின் எழுந்து என்னைக் கேட்டார்.

*முற்பகல் 11-35*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைத் தலைவரின் இருக்கைக்கு எதிரே வந்து நின்று கூச்சலிட்டனர்.)*

இதுமாதிரி அவையில், பாதி வழியில் வந்து நிற்பது நியாயமா? (குறுக்கீடுகள்) இது நியாயமா? எல்லோரும் அவரவர் இடத்திற்குப் போய் உட்காருங்கள். இல்லையென்றால் நான் நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் தலைவரும் அறிவிப்புக் கொடுத்திருக்கிறார். அவரை நான் பேச அழைக்கிறேன். (குறுக்கீடு) இல்லை. அவர் உங்கள் தலைவர்தானே? அவர் உங்கள் கட்சித் தலைவர்தானே? அவருக்கு வாய்ப்புத் தருகிறேன், பேசச் சொல்லுங்கள். (குறுக்கீடு) அவருக்கு வாய்ப்புத் தருகிறேன், பேசச் சொல்லுங்கள்.

**திரு. மு.க. ஸ்டாலின்:** *நான் பேசுகிறேன். (குறுக்கீடு) நான் பேசி விடுகிறேன். (குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கட்சி உறுப்பினர் பேசிக்கொண்டிருந்தபோது இடையிடையே சில வார்த்தைகளைச் சொன்ன காரணத்தால் அவற்றையெல்லாம் நீங்கள் அவைக் குறிப்பிலிருந்து நீக்கியிருக்கின்றீர்கள். தொடர்ந்து அவர் பேச முற்படுகிற நேரத்தில் அதே நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. எனவே, நீங்கள் அவருக்குப் பதிலாக நான் பேச வேண்டுமென்று ஒரு கருத்தைச் எடுத்துச் சொல்லியிருக்கிறீர்கள். அதற்காக நான் மகிழ்ச்சியடைகிறேன். நன்றி தெரிவிக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *நீங்களும்தான் முன்னறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள்.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** *ஆனால், ஓர் உறுப்பினருக்கு வாய்ப்புக் கொடுத்துவிட்டு அதுவும் ஒரு வழக்கறிஞராக, பேசக்கூடிய ஆற்றலைப் பெற்றவராக இன்னும் பெருமையோடு சொல்லவேண்டுமென்று சொன்னால், . . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *இல்லை, அவருக்கு வாய்ப்புக் கொடுத்தேன். அதைப் பயன்படுத்தவில்லை. ஒரு முறைக்கு இரு முறை வாய்ப்புக் கொடுத்தேன். அதைப் பயன்படுத்தவில்லை.*

**திரு. மு.க. ஸ்டாலின்:** ** *ஒருவருக்குப் பேச வாய்ப்புக் கொடுத்துவிட்டு, அதை மறுத்து நான் பேசுவது என்றால், அது மரபாக இருக்காது. எனவே, நாங்கள் இதைக் கண்டித்து வெளிநடப்புச் செய்கிறோம்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு. க. பாலகிருஷ்ணன், நீங்கள் பேசுங்கள்.*

---

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

2013 *மார்ச்* 27]

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனித சமூகமே வெட்கித் தலை குனியும் அளவுக்கு இலங்கையிலே இருக்கிற தமிழ் மக்கள்மீது இலங்கை இராணுவமும், ராஜபக்சே அரசாங்கமும் நடத்தி வருகிற கொடூரமான கோரக் கொலைகளைக் கண்டித்து தமிழகத்திலே மாணவர்கள், அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வலியுறுத்தியும், அதிலே மத்திய அரசு உறுதியான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று வற்புறுத்தியும், அவர்கள் நடத்தி வருகிற அந்தப் போராட்டம் குறித்து கொண்டுவரப்பட்டிருக்கும் சிறப்புக் கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அனுமதி அளித்திருக்கிற தங்களுக்கும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். உண்மையிலேயே அண்டை நாடாக இருக்கிற இலங்கையில், இவ்வளவு பெரிய கொடுமை வேறெங்கும் நடைபெறவில்லை என்று சொல்லக்கூடிய அளவுக்கு தமிழ் மக்கள் கொடுமைக்கு ஆளாக்கப்பட்டு வருகிறார்கள். கடைசி கட்டத்தில் நடைபெற்ற போராட்டத்தில் 50,000 பேருக்கு மேலே ராஜபக்சே அரசாங்கம் மக்களைக் கொன்று குவித்திருக்கிறது. பெண்களை, குழந்தைகளைப் பாதுகாக்க வேண்டுமென்கிற சர்வதேச நியதிகளைக்கூட காலிலே போட்டு மிதித்துவிட்டு அங்கே ஒரு மனித நாகரிகமற்ற கொடூரத்தை இழைத்துள்ளது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு நிமிடம். இங்கே தி.மு.க. உறுப்பினர் பேசும்போது ** வாய்ப்புக் கொடுக்கவில்லையென்று பதிவு செய்திருக்கிறார். அதை அவைக் குறிப்பிலிருந்து நீக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது. திரு. க. பாலகிருஷ்ணன்.*

**திரு. க. பாலகிருஷ்ணன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 12 வயதே நிரம்பிய பாலகன் என்றுகூடப் பார்க்காமல்*

---

***மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

[திரு. க. பாலகிருஷ்ணன்] [2013 மார்ச் 27

ராஜபக்சே அரசாங்கம் அந்தப் பாலகனைக் கொடூரமாகக் கொலை செய்திருப்பது உலகம் முழுவதும் இருக்கிற மனிதநேய மிக்க மக்கள் மத்தியில், குறிப்பாக தமிழ் மக்கள் மத்தியில் அதிர்ச்சியையும், கோபத்தையும் உண்டாக்கியிருக்கிறது. நீண்டகாலமாக நீடித்து வருகிற, தமிழ் மக்களுக்கு இழைத்து வருகிற அந்தக் கொடூரத்தை தடுத்து நிறுத்தியும், அங்கே தமிழ் மக்கள் மற்ற மக்களோடு சமமாக வாழ்கிற அதிகாரப் பகிர்வு, மறுவாழ்வு, மீள் குடியமர்வு, சிங்கள மொழிக்கு இணையாகத் தமிழ் மொழிக்கான சமத்துவ அந்தஸ்து என்கிற அந்த அடிப்படையில் அங்கே அரசியல் தீர்வு காணப்பட வேண்டுமென்று தமிழ்நாட்டில் இருக்கிற அனைத்துக் கட்சியினரும் அவரவர்களுக்கே உரித்தான வழியிலே போராட்டங்களை நடத்திக்கொண்டிருக்கிறோம். இதே அவையிலே இலங்கைத் தமிழர்களுடைய நலனைப் பாதுகாக்கிற வகையில், ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் முன்மொழிந்து நிறைவேற்றப்பட்டுள்ள தீர்மானங்களில் மிகுந்த கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அங்கே நடைபெறுகின்ற அந்தக் கொடூரத்தைத் தடுத்து நிறுத்த ஒட்டுமொத்த தமிழகமும், பல்வேறு அரசியல் கட்சிகளும் வலுவான போராட்டங்களை நடத்திக் கொண்டிருக்கிற இந்தச் சூழ்நிலையில், அந்தக் கொடுமையான கொலையின் கோரக் காட்சிகளினாலே ஈர்க்கப்பட்டு மாணவர்கள் இன்றைக்கு களத்திலே நின்று போராடிக்கொண்டிருக்கிறார்கள். சிலர் தங்களை மாய்த்துக்கொள்கிற, வேதனைமிக்க சில தற்கொலைச் சம்பவங்கள்கூட நடந்திருக்கின்றன. எனவே, இந்த நேரத்தில், தமிழ்நாட்டில் இருக்கிற அனைவரும் அந்த மக்களுடைய துயரத்தைப் பகிர்ந்துகொள்வதோடு, அதை நியாயமான முறையில் தீர்ப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்க இந்த அவை உட்பட, அனைவரும் சேர்ந்து தீர்மானங்களையெல்லாம் நிறைவேற்றியிருக்கிற இந்தச் சூழ்நிலையில், மாணவர்கள் போராடுவது தவறு அல்ல. அவர்களும் இந்தச் சமூகத்தினுடைய ஓர் அங்கம் என்கிற அடிப்படையிலே அந்தத் தமிழ் மக்களைக் காப்பாற்ற வேண்டும் என்கிற அந்த உணர்வை நம்மால் புரிந்துகொள்ள முடிகிறது.

2013 மார்ச் 27] [திரு. க. பாலகிருஷ்ணன்]

முற்பகல் 11–40

ஒட்டுமொத்த தமிழ் மக்களுடைய பிரச்சினையாக அனைவரும் சேர்ந்து அதில் ஈடுபட்டு அதில் தீர்வு காண வேண்டிய அவசியம் இருக்கிற சூழ்நிலையில், நம்முடைய தமிழ்நாடு சட்டமன்றமும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களும் மத்திய அரசாங்கத்தை தொடர்ந்து வற்புறுத்திக்கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், இப்படி அனைவரும் சேர்ந்து அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொண்டிருக்கின்ற சூழ்நிலையில், இப்போது தேர்வுகள் நெருங்கிக்கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், மாணவர்கள் இந்தப் போராட்டங்களையெல்லாம் விலக்கிக்கொண்டு தமிழகத்திலே அமைதியான முறையிலே கல்வி நிலையங்கள் நடைபெற ஒத்துழைக்க வேண்டும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு அந்த உத்தரவாதத்தை அளித்து, கல்வி நிலையங்களைத் துவங்கி, சுமுக நிலையை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு முன்வர வேண்டுமென்று மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்தை ஈர்க்க விரும்புகின்றேன். தங்களை மாய்த்துக்கொள்கிற எந்த சம்பவத்திற்கும் யாரும் இடம் அளித்துவிடக்கூடாது. ஏற்கெனவே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட வேண்டுகோள் விடுத்திருக்கிறார்கள். எனவே, தற்கொலைச் சாவுகள் ஏற்படும் வண்ணம் தங்களை மாய்த்துக்கொள்கிற முயற்சியிலே தமிழ் மக்கள் யாரும் ஈடுபட வேண்டாம் என்று இந்த நேரத்திலே கேட்டு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமைகிறேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய பல்கலைக்கழக மாணவர்கள், கல்லூரி மாணவர்கள், பொறியியல் கல்லூரி மாணவர்கள், சட்டக் கல்லூரி மாணவர்கள் இலங்கையிலே நடைபெற்றுவரக்கூடிய இனப் படுகொலைக்கு எதிராகவும், இந்தியாவில் ஆட்சி நடத்திக்கொண்டிருக்கக்கூடிய மத்திய அரசாங்கத்தினுடைய நடவடிக்கைகளைக் கண்டிக்கக்கூடிய முறையிலும், ஐக்கிய நாட்டு சபையில் ஏற்கெனவே கொண்டுவந்த தீர்மானத்தின் அடிப்படையில், இலங்கையில் நடைபெறுகின்ற அந்த இனப் படுகொலையைக் கண்டிக்க வேண்டுமென்ற அடிப்படையிலும்,

ராஜபக்சேவை குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டும், அங்கே ஓர் அரசியல் தீர்வு ஏற்பட வேண்டும் என்ற கோரிக்கையின் அடிப்படையிலும்தான் மாணவர்கள் போராட்டங்களை நடத்திக்கொண்டு வருகிறார்களே தவிர, இந்த அரசைக் கண்டித்தோ அல்லது வேறு பல நடவடிக்கைகளுக்காகவோ அவர்கள் போராட்டம் நடத்தவில்லை என்பதை இந்த நேரத்தில் நான் பதிவு செய்ய கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாணவர்கள் நடத்தக்கூடிய போராட்டம் என்பது இலங்கையில் இனப் படுகொலை தொடர்ச்சியாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது என்பதற்காக; முள்ளிவாய்க்காலில் கொத்துக் கொத்தாக தமிழர்களைப் படுகொலை செய்தபோது பாராமுகமாக இருந்தவர்கள், மத்தியில் ஆட்சியிலே இடம் பெற்றவர்கள், தமிழகச் சட்டமன்றத்திலே ஒரு தீர்மானத்தைத் கொண்டுவராதவர்கள்கூட இப்போது கூக்குரல் இடுவது என்பது (மேசையைத் தட்டும் ஒலி) வேடிக்கையாக என்னாலே பார்க்க முடிகிறது.

முற்பகல் 11–45

நான் இந்த நேரத்திலே ஒன்றைப் பதிவு செய்ய விரும்புகின்றேன். தமிழகத்தினுடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள்தான் தமிழக சட்டமன்ற வரலாற்றில் இலங்கையில் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய இனப் படுகொலைக்கு எதிராக, (மேசையைத் தட்டும் ஒலி) இதில் ஓர் அரசியல் தீர்வு ஏற்பட வேண்டுமென்பதற்காக, முதன்முறையாக இந்தச் சட்டமன்றத்திலே ஒருமனதாக திராவிட முன்னேற்றக் கழகம் உட்பட அனைவரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே பதிவுசெய்ய விழைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இப்பொழுது மாணவர்கள் நடத்தக்கூடிய போராட்டத்தை அமைதிப்படுத்த வேண்டும்.

அங்கே கொத்துக் கொத்தாக இனப் படுகொலை நடைபெற்ற நேரத்தில் தமிழர்களை, தமிழ் மக்களை, தமிழ் இன உணர்வு படைத்தவர்களைத் தட்டி எழுப்பக்கூடிய முறையில் 2010 ஆம் வருடம் அக்டோபர் மாதம் 2 ஆம் தேதி தமிழகமே எதிர்பார்க்கக்கூடிய முறையில் உடனடியாக அங்கே போரை நிறுத்தவேண்டும் என்பதற்கான முறையிலே பிரம்மாண்டமான

2013 மார்ச் 27] [திரு. எம். ஆறுமுகம்]

உண்ணாவிரதப் போராட்டத்தை இந்திய கம்யூனிஸ்டு கட்சி நடத்தியது என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன். தமிழகத்திலே நடைபெற்றுவரக்கூடிய மாணவர்கள் போராட்டம் அமைதியாக நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. தேர்வுகள் நடைபெற்றுக் கொண்டிருக்கக்கூடிய நேரம். மாணவர்கள் தங்களுடைய படிப்பை முடிக்க வேண்டும். தங்களுடைய தேர்வை முடிக்க வேண்டும். இலங்கை இனப் படுகொலைக்கு எதிராக அரசாங்கமும் இருந்து கொண்டிருக்கிறது. மத்திய அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டிக்கின்றபோது, தெருக்களில் யார், யார் உருவ பொம்மைகளை தமிழகத்திலே எரித்தார்கள் என்பது இந்த நாட்டு மக்களுக்கு நன்றாகத் தெரியும் என்று நான் கருதுகின்றேன். எனவே, இனப் படுகொலைக்கு எதிராக தீர்மானத்தைக் கொண்டு வந்திருக்கக்கூடிய நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீண்டும் தமிழகத்திலே நடைபெறக்கூடிய, பள்ளிக் கல்வி பயிலும் மாணவர்களுடைய போராட்டத்தை அமைதிப்படுத்துவதற்கும், மாணவர்கள் தேர்வில் பங்கெடுத்துக்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இலங்கையில் காமன்வெல்த் மாநாட்டை நடத்துவதால் இனப் படுகொலைக்கு எதிராக இந்திய அரசாங்கம் அதில் கலந்துகொள்ளக் கூடாது என்று கடிதம் அனுப்பிய ஒரே முதலமைச்சர் நம்முடைய மாண்புமிகு முதல்வர்தான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை இந்த நேரத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

எனவே, இனப் படுகொலைக்கு எதிராக தமிழின உணர்வு படைத்தவர்கள் ராஜபக்சேவிற்கு உரிய தண்டனையை வழங்கக்கூடிய முறையிலே, தமிழகச் சட்டமன்றத்தில் மற்றொரு தீர்மானத்தைக் கொண்டுவர வேண்டும் என்று மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையில் உள்நாட்டுப் போர் என்ற பெயரில் திட்டமிட்டு நடத்தப்பட்ட இனப் படுகொலையைக் கண்டிக்கின்ற வகையிலும், அந்த இனப் படுகொலை நிகழ்வதற்குக் காரணமாக

இருந்த கொடுங்கோலன் ராஜபக்சேவை போர்க் குற்றவாளி என்று சர்வதேச நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்று கோரியும், அதுமட்டுமில்லாமல், இத்தகைய நடவடிக்கைக்கு உதவிய இலங்கை அரசின்மீது பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும் என்றும், இந்தப் போர்க் குற்றங்கள் குறித்து சுதந்திரமான சர்வதேச, பன்னாட்டு நீதிமன்ற விசாரணை வேண்டுமென்பதை வலியுறுத்தியும், அங்கு மிச்சமுள்ள தமிழர்கள் இன்றைக்கும் காணாமல் போகின்ற சூழ்நிலை நிகழ்ந்துகொண்டிருப்பதைக் கண்டித்தும், மாணவர்கள் போராட்டம் தொடங்கி தமிழகத்திலுள்ள அனைத்துத் தரப்பினரும் வெகுண்டெழுந்து போராடிக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையில், ஒட்டுமொத்த தமிழகமும் அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்த சூழ்நிலையில், மத்திய அரசு அவர்களின் உணர்வுகளைக் கண்டுகொள்ளாத ஒரு சூழ்நிலையில், அந்த மாணவர்களின் போராட்டத்திற்கு மதிப்பளித்து, அவர்களுக்கு நிச்சயமாக இந்த அரசு உறுதுணையாக இருந்துகொண்டிருக்கிறது, இனியும் உறுதுணையாக இருக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். தற்போதைய சூழ்நிலையைக் கருத்தில்கொண்டு அந்த மாணவர்கள் போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திவைத்து தங்களுடைய கடமைகளை நிறைவேற்ற வேண்டிய சூழ்நிலையில் இருக்கின்ற காரணத்தினால், மாணவர்கள் தங்களுடைய போராட்டத்தைத் தற்காலிகமாக நிறுத்திக்கொண்டு, மீண்டும் தேவை வரும் சமயத்தில் வெகுண்டெழுந்து எழுச்சியுடன் போராடவேண்டும் என்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக கேட்டுக்கொண்டு, அரசின் கவனத்தை ஈர்த்து அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1965–க்குப் பிறகு தமிழகத்தில் ஒட்டுமொத்தமாக மாணவச் சமுதாயம் முழுவதும் வீதிக்கு வந்து, ஈழத்திலே நடைபெற்ற இந்த நூற்றாண்டின் மிகக் கொடூரமான genocide என்ற இனப் பேரழிவிற்கு எதிராக போராட்டத்தை நடத்தி வருகிறது கல்லூரிகள் காலவரையின்றி மூடப்பட்ட போதிலும்கூட இந்தப் போராட்டம் நடைபெற்று வருகிறது. இரண்டு அம்சங்களை முன்வைத்து மாணவர்கள் இந்தப் போராட்டத்தை நடத்துகிறார்கள். இலங்கையிலே, ஈழத்திலே தமிழினத்தைக் கொன்று குவித்த

2013 மார்ச் 27] [முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]

ராஜபக்சேவும், அவரைச் சார்ந்தவர்களும் சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திலே நிறுத்தப்பட்டு, பொது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு தண்டிக்கப்படவேண்டும் என்பது அவர்களுடைய முதல் கோரிக்கை. இரண்டாவது, ஈழத்திலே referendum என்று சொல்லக்கூடிய பொது கருத்துக் கணிப்பு நடத்தப்படவேண்டும். இந்த இரண்டு கோரிக்கைகளையும் முன்வைத்து இந்தப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள்.

முற்பகல் 11–50

தமிழகத்திலே அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு பொறுப்பேற்ற பிறகு, இந்த அவையிலே வரலாற்றுச் சிறப்பு மிகுந்த ஒரு தீர்மானத்தை, இலங்கையிலே நடைபெற்றது இனப்பேரழிவு என்பதைப் பிரகடனப்படுத்தி, இலங்கையுடனான, பொருளாதார உறவைத் துண்டித்துக்கொள்ள வேண்டுமென்ற தீர்மானத்தை (மேசையைத் தட்டும் ஒலி) இந்த அவையிலேதான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்து நிறைவேற்றினார்கள். அதுமட்டுமல்ல, சென்ற ஆளுநர் உரை கூட்டத் தொடரின்போது, மனிதநேய மக்கள் கட்சியின் சார்பாக நான் பேசும்போது, ஜெனீவாவிலே, ஐ.நா. மனித உரிமை ஆணையத்திலே, அமெரிக்கா கொண்டு வரக்கூடிய ஒரு தீர்மானம் இருக்கின்றது; அதை இந்திய அரசு ஆதரிக்க வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை நான் வைத்தேன். மறு நாள் ஆளுநர் உரை மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசும்போது, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், அந்தத் தீர்மானம் வலுவில்லாத தீர்மானமாக இருந்தாலும்கூட, ஒரு symbolic ஆக, அடையாளமாக இந்திய அரசு அதை ஆதரிக்க வேண்டுமென்ற அந்தக் கோரிக்கையை வைத்தார்கள். ஆனால், அந்தத் தீர்மானத்தை நீர்த்துப் போக வைக்கக்கூடிய வேலையைத்தான் மத்திய அரசு செய்து, இன்று அது அம்பலப்பட்டு நின்றுகொண்டிருக்கக்கூடிய காட்சியைப் பார்க்கின்றோம்.

பலரும் ஐ.நா.விலே இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றதென்று சொல்கிறார்கள். ஐ.நா.விலே தீர்மானம் நிறைவேற்றப்படவில்லை. ஐ.நா.வினுடைய ஒரு பிரிவாக இருக்கக்கூடிய, ஐ.நா.வினுடைய மனித உரிமை ஆணையத்திலேதான் கொண்டுவரப்பட்டிருக்கின்றது. இப்போது, தமிழகத்திலே, நம்முடைய மாணவர்கள் நடத்துகின்ற இந்தப் போராட்டத்தினுடைய

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2013 மார்ச் 27

கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமென்றால், ஐ.நா.வினுடைய பாதுகாப்பு சபையிலே, லெபனானிலே, அந்த நாட்டினுடைய பிரதமர் ரஃபீக் ஹரீரி உட்பட 12 பேர் கொலை செய்யப்பட்டதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் ஒன்று நிறுவப்பட்டு, பொது விசாரணைக்கு அந்த இனப் படுகொலையிலே, அந்த war crimes–இலே, போர்க் குற்றத்திலே ஈடுபட்டவர்கள் விசாரிக்கப்பட்டார்கள். ஆனால், ஈழத்திலே, ஜோசப் ராயப்பன் என்ற யாழ்ப்பாணத்தினுடைய பேராயர், இலங்கை அரசு அமைத்த நல்லிணக்கக் குழுவிலே, Lessons Learnt and Reconciliation Commission–இலே யாழ்ப்பாணத்திலே, வடக்கு ஈழத்திலே மட்டும் ஒரு இலட்சத்து 45 ஆயிரம் பேருடைய கதி என்ன என்று தெரியவில்லை என்று சொல்லியிருக்கிறார். டப்ளினில் உள்ள பொதுத் தீர்ப்பாணையமும், ஓர் இனப் பேரழிவு நடைபெற்றிருக்கின்றது என்று சொல்லியிருக்கின்றது. ஐ.நா.வினுடைய மனித உரிமை ஆணையத்தினுடைய ஆணையாளர் திருமதி நவநீதம்பிள்ளை அவர்களும் இதை உறுதி செய்திருக்கிறார்கள். ஏன், ஐ.நா.வினுடைய பொதுச் செயலாளர் பான் கி மூன் அமைத்த மூவர் குழு, இலங்கை அரசாங்கத்தினுடைய ஒத்துழைப்பு எதையுமே பெறாமல் விசாரணை செய்து, மிகத் தெளிவாக போர்க் குற்றம் நடைபெற்றிருக்கிறது என்பதைப் பிரகடனப்படுத்தியிருக்கின்றது. எனவே, நம்முடைய மாணவர்களுடைய போராட்டம், தேர்வு வரக்கூடிய இந்தச் சூழலிலே நிறுத்தப்பட வேண்டும். ஆனால், அதேநேரத்திலே, இந்த அவையிலே இரண்டு விஷயங்களையும், ஐ.நா.–வினுடைய Security Council–இலே, பாதுகாப்பு சபையிலே, எப்படி கொசாவாவிலே, எப்படி போஸ்னியாவிலே, எப்படி லெபனானிலே ஒரு சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் போர்க் குற்றங்களுக்காக நிறுவப்பட்டு, பொது விசாரணை நடைபெற்றதோ, அதேபோல, கொடுங்கோலன் ராஜபக்சேயும், அவனைச் சார்ந்தவர்களும் நிறுத்தப்படுவதற்காக இந்தியா அழுத்தம் கொடுக்க வேண்டுமென்று நாம் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும். ஈழத்திலே பொது கருத்துக் கணிப்பு, referendum நடத்தப்படுவதற்கும் தீர்மானம் நிறைவேற்றப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்தை ஈர்த்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தியாவினுடைய எல்லையிலேயிருந்து 23 கிலோ மீட்டருக்கு அப்பால் இருக்கக்கூடிய ஈழத்தில், தமிழ் மக்கள் தங்களுடைய சுய மரியாதைக்காகவும், சுய நிர்ணய உரிமைக்காகவும், பாதுகாப்புக்காகவும் ஏறக்குறைய 60 ஆண்டுக் காலத்திற்கும் மேலாக அமைதியான வழியில், ஆயுதம் தாங்கிய வழியிலே போராடிக் கொண்டிருக்கிறார்கள். இலங்கை 1948–லே சுதந்திரம் பெற்றது. சுதந்திரம் பெற்றவுடனே 10 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்களுடைய வாக்குரிமையையும், ஜனநாயக உரிமையையும் பறித்த, மிகப் பெரிய ஜனநாயக விரோதமான அரசாக விளங்கியது இலங்கை அரசு. இன்றும்கூட, ஒரு பக்கம் ஈழத் தமிழ் மக்களுடைய உரிமைகளைப் பறிப்பது, இன்னொரு பக்கம் பல தலைமுறைகளுக்கு முன்பாக, எப்படி தமிழகத்திலேயிருந்து மலேசியாவுக்கும், பர்மாவுக்கும், பிஜிக்கும், தென் ஆப்பிரிக்காவிற்கும், வாழ்வதற்காகவும் அல்லது ஆப்பிரிக்கக் கண்டங்களிலேயிருந்து கருப்பின மக்கள் துன்புறுத்தப்பட்டு, பிற நாடுகளுக்கு அழைத்துச் செல்லப்பட்டார்களோ, அதுபோல, தமிழ் மக்களும் ஆங்கிலேயர்களுடைய காலத்தில் . . .*

*முற்பகல் 11–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி, சுருக்கமாக அரசினுடைய கவனத்தை ஈர்த்துப் பேசுங்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *சரி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆங்கிலேயர்களுடைய காலத்தில் தமிழ் மக்கள், இலங்கைக்கு அழைத்துச் செல்லப்பட்டவர்கள் அங்கே இலங்கையினுடைய வளங்களைப் பெருக்குவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்த மக்கள், இன்றும்கூட 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் அங்கே வாக்குரிமை இல்லாமலும், குடியுரிமை இல்லாமலும் இருக்கிறார்கள். அந்த அளவிற்கு இலங்கையிலே ஒரு பகுதியிலே வடக்கு, கிழக்கிலே வாழக்கூடிய தமிழ் மக்கள் உரிமைகளை இழந்து நாடற்றவர்களாக வாழ்கிறார்கள். மலைப் பகுதியிலே வாழக்கூடியவர்கள் குடியுரிமையற்றவர்களாக வாழ்கிறார்கள்.*

2008–2009 ஆம் ஆண்டிலே விடுதலைப் புலிகளுக்கு எதிரான போர் என்ற பெயரில் ராஜபக்சே அரசு நடத்திய தாக்குதலில் ஒன்றரை இலட்சத்திற்கும் மேற்பட்ட தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். 2009 ஆம் ஆண்டு மே 17, 18 ஆகிய இரண்டு தினங்களில் மட்டும் முள்ளிவாய்க்கால் பகுதியில் 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் என்ற செய்திகள் வருகின்றன. எனவே, அங்கு நடைபெற்றது முழுக்க முழுக்க போர் விதிமுறை மீறல், மனித உரிமை மீறல்; இது ஓர் இன அழிப்பு நடவடிக்கை. எனவே, இதை முழுமையாக விசாரிக்க வேண்டுமென்று சொன்னால், அங்கே இருக்கக்கூடிய ஈழத் தமிழ் மக்களுக்கு நியாயம் கிடைக்க வேண்டுமென்று சொன்னால், இலங்கை அரசு குற்றவாளிக் கூண்டில் நிறுத்தப்பட வேண்டும். அதற்கு–International Independent Investigation–சர்வதேச அளவிலான பன்னாட்டு விசாரணை ஆணையம் ஒன்றுதான் வழி என்று உலகெங்கும் வாழக்கூடிய ஈழத் தமிழ் மக்கள் குரல் கொடுத்து வருகிறார்கள். எனவே, இந்த மன்றத்திலே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் 2011 ஆம் ஆண்டு அவரே முன்மொழிந்த இரண்டு தீர்மானங்கள், ஒன்று, இன அழிப்பிலே ஈடுபட்டு வருகின்ற இலங்கை அரசுக்கு எதிராக பொருளாதாரத் தடை விதிக்க வேண்டுமென்ற வரலாற்றுச் சிறப்புமிக்க தீர்மானம். மற்றொன்று, கச்சத் தீவை மீட்டெடுக்க வேண்டுமென்று ஒரு தீர்மானம். அதேபோல, 3 தமிழர்களுடைய உயிரைப் பாதுகாப்பதற்கு ஒரு தீர்மானத்தை முன்மொழிந்தார். எனவே, இந்த மாமன்றத்தின் வாயிலாக இந்திய அரசை வலியுறுத்தக்கூடிய வகையிலே சுதந்திரமான சர்வதேச விசாரணை ஆணையம் ஒன்று அமைக்க இலங்கை அரசுக்கு எதிராக ஐ.நா.–விலே மனித உரிமை ஆணையத்திலே தீர்மானம் கொண்டு வருவதற்கு இந்திய அரசு முயல வேண்டும். வருகின்ற செப்டம்பர் மாதத்தில் நடைபெறக்கூடிய மனித உரிமை ஆணையத்திலே அதைக் கொண்டு வரவேண்டும் என்பதற்குண்டான ஏகமனதான தீர்மானத்தை இந்த அவையிலே நிறைவேற்ற வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வேண்டுகோள் வைக்கிறேன்.

அதேபோல, இன்று தமிழகமெங்கும் இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி மாணவர்கள் எந்தவிதமான அரசியலுக்கும் அப்பாற்பட்டு போராடி வருகிறார்கள். அவர்களுடைய போராட்டங்கள் நியாயமானது, முழுக்க முழுக்க

2013 மார்ச் 27] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

ஏற்றுக்கொள்ளக்கூடியது. இருந்தாலுங்கூட அவர்களுடைய கல்வி எந்தவிதத்திலும் தடைபடாமல் இருக்கக்கூடியவண்ணம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், அவர்களுக்கு ஆதரவு அளிக்கக்கூடிய வகையிலே, ஆதரவான வார்த்தைகள் சொல்லக்கூடிய வகையிலே, அவர்களுடைய போராட்டத்தில் உள்ள நியாயங்களை ஏற்றுக்கொண்டு, அவர்களுடைய போராட்டங்களைத் தற்காலிகமாகவாவது வாபஸ் பெற வைப்பதற்குண்டான தீர்மானத்தை இந்த அவையிலே கொண்டு வர வேண்டுமென்று புதிய தமிழகம் கட்சியின் சார்பாக வலியுறுத்தி அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கையிலே பல ஆண்டுக்காலமாக தமிழர்களுக்கு சம உரிமை வழங்கப்படாத சூழ்நிலை ஏற்பட்டு, அங்கு புரட்சி வெடித்து, தமிழ் இனமே அழிக்கப்படுகின்ற சூழ்நிலை உருவாகியிருப்பது அனைவருக்கும் தெரியும். சிங்கள இராணுவத்தின் கொடூரச் செயல்களின் உச்சகட்டமாக 2009 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் மே மாதம்வரை தமிழினத்தைக் கூண்டோடு அழிக்க வேண்டுமென்ற எண்ணத்திலே இனப் படுகொலையில் ஈடுபட்டு, தமிழ் இனமே அழியக்கூடிய ஒரு சூழ்நிலை உருவாகியிருந்தது அனைவருக்கும் தெரியும். ஆனால், அங்கு புரட்சி வீரராகத் திகழ்ந்த பிரபாகரன் அவர்களின் மகனான 12 வயது பாலச்சந்திரன் அவர்கள் சுட்டுக் கொல்லப்பட்ட நிகழ்வின் புகைப்படம் அனைத்துப் பத்திரிகைகளிலும் வந்த பிறகு அது நெஞ்சைப் பிளக்கும் அளவிற்கும், அனைவரின் கண்களில் கண்ணீர் வரும் அளவிற்கும் அந்த நிகழ்வு இருந்ததன் காரணமாக மாணவர்களின் மத்தியிலும் சரி, வழக்கறிஞர்களின் மத்தியிலும் சரி, தமிழகத்தில் உள்ள அனைவரின் மத்தியிலும் சரி, வேகமாகவும், துரிதமாகவும் மத்திய அரசை வலியுறுத்தி தீர்க்கமான ஒரு முடிவைக் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணம் மேலோங்கியது.

நண்பகல் 12–00

முதலாவதாக ராஜபக்சே போர்க் குற்றவாளியாக அறிவிக்கப்பட வேண்டும். ஒரு பொது வாக்கெடுப்பு எடுத்து, போர்க் குற்றவாளியாக

அறிவிப்பதற்கு மட்டுமல்லாமல், பொருளாதாரத் தடையை நிரந்தரமாக விதிக்க வேண்டுமென்ற எண்ணத்தையெல்லாம் மாணவர்கள் இன்று பதித்து வருகிறார்கள். அங்கே இனப் படுகொலை என்பது அனைவரையும் கூண்டோடு அழிக்க வேண்டுமென்ற சூழ்நிலை உருவாகிக் கொண்டிருப்பது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். அந்த இனப் படுகொலை தொடர்ந்துகொண்டிருக்கிற சூழ்நிலையிலே இங்கு மாணவர்களும் போராட்டத்தில் குதித்திருக்கிறார்கள். ஆனால், மாணவர்கள் போராட்டத்தில் குதித்ததற்குச் சிலர் பல காரணங்களைச் சொல்லியிருக்கிறார்கள். இந்தப் போராட்டங்கள் எல்லாம் வருவதற்கு முன்பே, இந்தச் சட்டமன்றத்திலே மாபெரும் சாதனை படைக்கும் அளவிற்கு தீர்மானங்களை, ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனைக்குரிய கொலையாளிகளை விடுவிக்கவேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். ராஜபக்சே அரசுக்குப் பொருளாதாரத் தடை விதிக்கவேண்டும் என்று சிறந்த ஒரு தீர்மானத்தை கொண்டுவந்ததன்மூலம் ஈழ அரசுக்கு எதிராக உறுதியான ஒரு முடிவை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்திருக்கிறார்கள் என்றுதான் நாம் சொல்லவேண்டும். ஆக, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஈழத் தமிழகம் எப்படி இருக்கவேண்டும், ஈழத் தமிழர்களின் நல்வாழ்வு எப்படி இருக்கவேண்டும் என்று உன்னிப்பாக கவனித்து, அந்த உணர்வோடு செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் என்பதை இங்கு நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்று மாணவர்கள் போராட்டம் நடந்துகொண்டிருக்கும் சூழ்நிலையிலே, மாணவர்கள் இப்போராட்டத்தில் உணர்வுபூர்வமாக இருக்கிறார்கள் என்பதை அனைவரும் அறிவோம். அதே சமயத்தில் இந்தப் பிரச்சினைக்குக் காரணமாக இருந்த சிலர், அவர்கள் இந்தச் சபையிலே இருப்பார்கள், வெளிநடப்புச் செய்யமாட்டார்கள் என்று எண்ணி அமர்ந்துகொண்டு இருந்த எனக்கு அவர்கள் வெளிநடப்புச் செய்தது ஒரு வருத்தம்.

அவர்கள் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டு வந்தது மாணவர்கள் நலன் கருதியா அல்லது அரசியலுக்காக செய்கிறார்களா என்று புரியாத சூழ்நிலையில், அவர்கள் ஒரு கவன ஈர்ப்பைக் கொண்டுவந்து மாணவர்களுக்கு என்ன

2013 *மார்ச்* 27] [*திரு. ரா. சரத்குமார்*]

*செய்யவேண்டும், மாணவர்கள் போராட்டத்தில் இறங்கி இருக்கிறார்கள் என்று சொல்லும்போது, இந்த மாணவர்களின் போராட்டத்தை உணர்ந்த ஒரு முதலமைச்சர் இங்கே இருக்கிறார்கள்; மாணவர்களின் போராட்டம் நியாயமானதுதான் என்பதை மாண்புமிகு முதல்வர் அவர்கள் உணர்ந்து இருக்கிறார்கள். எதற்காக கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன என்கிற காரணம் அனைவருக்கும் புரியும். இதை அரசியல் இலாபத்திற்காக அரசியல் நோக்குடன் பார்ப்பவர்கள் சிலர் இருப்பதால்தான், இது வேறுவிதமாக திசை திருப்பிவிடக்கூடாது என்கிற காரணத்தாலேதான், கல்லூரிகள் மூடப்பட்டிருக்கின்றன. இருப்பினும், மாணவர்களுக்கு மார்ச், ஏப்ரல் மாதத்தில் தேர்வுகள் இருக்கிற காரணத்தால், அனைவர் மீதும் கருணை காட்டுகின்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்மீது நம்பிக்கை வைத்து நம்பிக்கையோடு, தீர்க்கமான முடிவு எடுக்கும் மாண்புமிகு முதலமைச்சர் இருக்கும்போது அவர்கள்மீது நம்பிக்கை வைத்து, அந்தப் போராட்டத்தை மாணவர்கள் தவிர்க்கவேண்டும். மாணவர்கள் கல்லூரிகளுக்குச் சென்று தேர்வுகளை எழுதி, வாழ்க்கையிலே உயரவேண்டும் என்ற எண்ணத்தைப் பிரதிபலிக்கும் வகையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தச் செயலில் ஈடுபட்டு, அதையும் தாங்கள்தான் தீர்த்து வைக்கவேண்டும் என்று கேட்டு, இப்பிரச்சினையில் அரசின் கவனத்தை ஈர்த்து விடைபெறுகிறேன், நன்றி, வணக்கம்.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவைக்குத் திரும்பினர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *தமிழர்களின் வாழ்வு உயர, தன்னையே தியாகம் செய்து தனி மனித இராணுவமாய் அயராது பாடுபட்டுவரும் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தைக் கருத்திலேகொண்டு, இதுசம்பந்தமாக அரசின் பதிலை வழங்கி, தீர்மானம் ஒன்றை முன்மொழிய அனுமதி கோரியுள்ளார்கள். அவர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை குறித்தும், இந்தப் பிரச்சினைத் தொடர்பாக மாணவ, மாணவியர் நடத்திவரும் போராட்டம் குறித்தும் மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த*

அவையினுடைய கவனத்திற்குக் கொண்டுவந்து தங்களது கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள். இந்தப் பிரச்சினை தொடர்பாக அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகள் குறித்து எனது விளக்கத்தினை தங்களின் வாயிலாக இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

இலங்கைத் தமிழர்கள் தங்கள் சொந்த நாட்டிலேயே இரண்டாம் தர குடிமக்களாக கருதப்படுவதை எதிர்த்தும், இலங்கை அரசின் இனவெறிக் கொள்கையை எதிர்த்தும், அங்குள்ள தமிழர்கள் 1980 ஆம் ஆண்டிற்கு முன்பிருந்தே குரல் எழுப்பி வருகிறார்கள். இந்த நீண்ட, நெடிய உரிமைப் போராட்டத்தை நசுக்கும்வண்ணம், ஒட்டுமொத்தத் தமிழினத்தையே அழிக்க வேண்டும் என்ற நோக்கில் 2007 ஆம் ஆண்டிலிருந்து திட்டம் தீட்டி, அதனை வெற்றிகரமாக 2009 ஆம் ஆண்டு நிறைவேற்றியது இலங்கை அரசு. தமிழினத்தை அழித்த சிங்கள வெறிபிடித்த இலங்கை அரசுக்கு அனைத்துவிதமான உதவிகளையும் செய்தது தி.மு.க. அங்கம் வகித்த மத்திய காங்கிரஸ் கூட்டணி அரசு. (மேசையைத் தட்டும் ஒலி)

இலங்கை இராணுவத்தினருக்கு இந்திய மண்ணில் இந்திய இராணுவம் இரகசியமான முறையில் போர்ப் பயிற்சி அளித்தது, இலங்கை இராணுவத்திற்கு இந்திய அரசு ஆயுதங்களை வழங்கியது, மிக நவீன இராணுவ ரேடார் கருவிகளை வழங்கியது, இந்திய இராணுவத்தின் மூத்த அதிகாரிகள் மற்றும் இந்திய அரசின் உயர் அதிகாரிகள் இலங்கைக்கு அடிக்கடி சென்றது என பல செய்திகளை அப்போது ஊடகங்கள் படம் பிடித்துக் காண்பித்தன. நானும் இதுகுறித்து அறிக்கைகள் வெளியிட்டு இந்திய அரசின் தமிழின விரோதச் செயலுக்கு எனது கடும் கண்டனத்தைத் தெரிவித்திருந்தேன். இந்தச் செய்திகளுக்கெல்லாம் மத்திய அரசு எவ்வித மறுப்பையும் தெரிவிக்கவில்லை.

பிற்பகல் 12–05

தமிழர் நலனை முன்னிட்டு மத்திய காங்கிரஸ் கூட்டணியிலிருந்து தி.மு.க. வெளியேற வேண்டுமென்றும் அப்போதே நான் தெரிவித்திருந்தேன். ஆனால், அப்போது மாநிலத்திலும், மத்தியிலும் ஆட்சி அதிகாரத்தில் இருந்த தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதியோ அனைத்துக் கட்சிக் கூட்டத்தைக் கூட்டி இரண்டு வாரத்தில் போர் நிறுத்தத்திற்கு மத்திய அரசு

2013 மார்ச் 27] [செல்வி ஜெ ஜெயலலிதா]

முன்வராவிட்டால் தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்கள் இராஜினாமா என்ற அளவில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். பின்னர் இராஜினாமா கடிதங்கள் யாரிடம் கொடுக்கப்பட்டன என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் நன்கு அறிவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

சில நாட்கள் கழித்து அப்போதைய மத்திய அமைச்சர் திரு. பிரணாப் முகர்ஜி அவர்கள் திரு. கருணாநிதியை சந்தித்த பிறகு, "மத்திய அரசின் நடவடிக்கை திருப்தியளிப்பதாக இருக்கிறது" என்று தெரிவித்து, இராஜினாமா நாடகத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார் திரு. கருணாநிதி.

இதனையடுத்து, டெல்லி வந்த இலங்கை அதிபர் பாரதப் பிரமரைச் சந்தித்த பிறகு 'போர் நிறுத்தம் கிடையாது' என்று அறிவித்தார். பின்னர், "இந்தியப் பேரரசு தனது செல்வாக்கைப் பயன்படுத்தி இலங்கை அரசைப் போர் நிறுத்தத்திற்கு இணங்க வைத்து, தமிழர் பகுதிகளில் நிலையான அமைதியும், சக வாழ்வும் ஏற்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்" என்ற அளவில் 12-11-2008 அன்று தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

'அனைத்துக் கட்சிக் கூட்டம்', 'சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் கூட்டம்', 'தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் தீர்மானம்', 'மனிதச் சங்கிலி போராட்டம்', 'நாடாளுமன்ற உறுப்பினர்களின் பதவி விலகல் கடிதங்களை திரு. கருணாநிதியே பெற்றுக் கொள்ளுதல்', 'எல்லோரும் பிரதமருக்குத் தந்தி அனுப்புங்கள்' என்ற அறிவிப்பு, 'டெல்லியில் பிரதமருடன் சந்திப்பு', 'வேலை நிறுத்தம்', 'பேரணி' என பல்வேறு கண்துடைப்பு நாடகங்கள்தான் நடந்தனவே தவிர, ஆக்கபூர்வமான நடவடிக்கைகள் எதுவும் எடுக்கப்படவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) இலங்கையில் போரை நிறுத்த. . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் இல்லை, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், உட்காருங்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவையெல்லாம் நடந்த வரலாற்று உண்மைகள். வரலாற்றை மறுக்க முடியாது, மறைக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

[2013 மார்ச் 27

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *முதலமைச்சருடைய பதிலுரையிலே குறுக்கிட்டுப் பேசவேண்டாம், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்) இதுமாதிரி செய்வது சரியல்ல.*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கூச்சலிட்டுக்கொண்டே தங்கள் இருக்கையை விட்டு எழுந்து பேரவைத் தலைவரின் இருக்கை அருகே வந்தனர்.)*

*முதலில் உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (குறுக்கீடுகள்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். (கூச்சல்—குழப்பம்) உங்கள் இடத்திற்குச் செல்லுங்கள். உங்கள் இருக்கைக்குச் செல்கிறீர்களா, இல்லையா? உட்காருகிறீர்களா, இல்லையா? (கூச்சல்—குழப்பம்) அவைக் காவலர்கள் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்களை வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அவையிலிருந்து அவர்களை வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். (குறுக்கீடுகள்) அவர்களை வெளியேற்றும்படி உத்தரவிடுகிறேன். அனைவரும் வெளியே போகவேண்டும். (கூச்சல்—குழப்பம்)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டனர்.)*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டே வெளியில் சென்றனர்.)*

*இந்த மாதிரி கோஷம் போடக்கூடாது. அவைக் காவலர்கள் லாபியில் அவர்கள் கோஷமிடுவதற்கு அனுமதிக்காமல் வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். இவ்வளவு முக்கியமான பிரச்சினையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பொறுப்போடு பதில் அளித்துக்கொண்டிருக்கிறார்கள். அதைக் கேட்பதற்கில்லாமல் இதுபோன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுவதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.*

*பிற்பகல் 12—10*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .*

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் லாபியில் தொடர்ந்து கோஷமிட்டுக் கொண்டிருந்தனர்.)*

2013 மார்ச் 27]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** லாபியில் கோஷம் போட்டுக் கொண்டிருக்கும் உறுப்பினர்களை வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். லாபியில் யாரும் கோஷம் போடாமல் இருக்க அவர்களை உடனடியாக வெளியேற்றும்படி கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'இலங்கையில் போரை நிறுத்த ஏற்பாடு செய்கிறேன்' என்று சொல்லி போரை தீவிரப்படுத்தியதுதான் மிச்சம். கடைசியாக நடைபெற்ற திரு. கருணாநிதியின் மூன்று மணி நேர உண்ணாவிரத நாடகத்தின்மூலம் (மேசையைத் தட்டும் ஒலி) இலட்சக்கணக்கான அப்பாவி இலங்கைத் தமிழர்கள் ஒரே நாளில் இலங்கை இராணுவத்தால் கொல்லப்பட்டனர்.

ஆனால், இந்த மூன்று மணி நேர உண்ணாவிரதத்தைப் பற்றி புது விளக்கங்களைச் சமீப காலமாகக் கூறி வருகிறார் திரு. கருணாநிதி. இலங்கையில் தமிழர்கள்மீதான போரை நிறுத்திவிட்டதாக இலங்கை அரசு மத்திய அரசுக்குத் தெரிவித்ததாகவும், அதனை மத்திய அரசு நம்பி தனக்குத் தெரியப்படுத்தியதாகவும், அதனை தான் நம்பி இலங்கையில் போர் முடிந்துவிட்டது என்று அறிவித்ததாகவும், இலங்கை அரசு அவ்வாறு ஏமாற்றிவிட்டதாகவும் சமீப காலமாக திரு. கருணாநிதி கூறி வருகிறார். இதனை எந்தத் தமிழரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

'போர் நிறுத்தம் ஏற்பட்டுவிட்டது' என்று கூறி தனது உண்ணாவிரத நாடகத்தை மூன்று மணி நேரத்தில் முடித்துக் கொண்டதற்கு அடுத்த நாள், 'கனரக ஆயுதங்களைப்' பயன்படுத்தி தாக்குதல் நடைபெறுவதாகச் செய்திகள் வந்திருக்கிறதே என்று பத்திரிகையாளர்கள் கேள்வி எழுப்பியதற்கு, 'மழைவிட்டும் தூவானம் விடவில்லை என்பார்களே, அதைப்போலத்தான்' என்று பதில் அளித்தார் திரு. கருணாநிதி. அதாவது, போர் நிறுத்தம் ஏற்படவில்லை என்பதை நன்கு உணர்ந்துதான் இதுபோன்ற பேட்டியை அளித்துள்ளார் திரு. கருணாநிதி.

"இலங்கையில் உச்சகட்டப் போர் முடிவுக்கு வந்த பிறகு, 3.5 இலட்சத்திற்கும் மேற்பட்ட இலங்கைத் தமிழர்கள் எவ்வித

அடிப்படை வசதியுமின்றி முகாம்களில் தங்க வைக்கப்பட்டு இலங்கை அரசால் கொடுமைப்படுத்தப்படுகின்றனர். இதைத் தடுத்து நிறுத்த மத்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்" என்று நான் பல முறை வலியுறுத்தினேன். ஆனால், ஆட்சி அதிகாரத்தில் இருந்த திரு. கருணாநிதியோ, தன் மகள் கனிமொழி உட்பட தி.மு.க. மற்றும் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்களை இலங்கைக்கு அனுப்பி, இலங்கைத் தமிழர்கள் கொல்லப்படுவதற்குக் காரணமாக இருந்த இலங்கை அதிபரைச் சந்திக்க வைத்து, கை குலுக்கி, விருந்துண்டு, பரிசுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளச் செய்தார். (மேசையைத் தட்டும் ஒலி) பரிசு பொருட்களைப் பெற்று வந்த அவர்களை தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி விமான நிலையத்திற்குச் சென்று வரவேற்றார். பின் பத்திரிகையாளர்களைச் சந்தித்த திரு. கருணாநிதி, 'முகாம்களில் தமிழர்கள் யாரும் சித்ரவதை செய்யப்படவில்லை' என்று பத்திரிகைகளுக்குப் பேட்டி அளித்தார்.

மத்தியிலும், மாநிலத்திலும் ஆட்சி அதிகாரத்தில் இருக்கும்போது, தானும், தன் குடும்பத்தினரும் பதவியில் இருக்க வேண்டும் என்பதற்காக, இலங்கைத் தமிழர்கள்மீதான இலங்கை அரசின் தாக்குதலுக்கு உறுதுணையாக, ஆதரவாக இருந்து, அவர்கள் அழிவதற்கு மறைமுகக் காரணமாக விளங்கிய தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் ஆட்சி அதிகாரத்தை இழந்த பின், டெசோ அமைப்பை மீண்டும் புதுப்பித்துள்ளார். திடீரென்று ஞானோதயம் பிறந்ததுபோல் இலங்கைத் தமிழர்கள் பிரச்சினையில் அதிக அக்கறை செலுத்துவது போல் காட்டிக்கொள்ள முயற்சிக்கிறார் தி.மு.க. தலைவர் திரு. கருணாநிதி.

மத்திய அமைச்சரவையிலிருந்து வெளிவந்ததை இலங்கைத் தமிழர்களுக்காக தான் செய்த மிகப் பெரிய தியாகம் என்று சித்தரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு இருக்கிறார் திரு. கருணாநிதி. மத்திய அரசுக்கும், தி.மு.க.–வுக்கும் ஒட்டும் இல்லை, உறவும் இல்லை என்று காட்டிக் கொள்ளும் திரு. கருணாநிதி, இரயில்வே குழுத் தலைவர் பதவியில் தி.மு.க. நாடாளுமன்ற குழுத் தலைவர், திரு. டி.ஆர். பாலு இன்று வரை தொடருவது குறித்து வாய் திறக்கவில்லையே!

2013 *மார்ச்* 27] [செல்வி ஜெ ஜெயலலிதா]

*பிற்பகல் 12–15*

மத்திய அமைச்சராக இருந்த அவரது மகன் திரு. அழகிரி காங்கிரஸ் தலைவரையும், பாரதப் பிரதமரையும், மத்திய அமைச்சர் திரு. சிதம்பரத்தையும் சந்தித்து இருக்கிறார். ராஜினாமா செய்த பின் உங்கள் மன நிலை என்ன என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு, “அலுவலகத்திற்குப் போக முடியவில்லை, மக்களுக்கு சேவை செய்ய முடியவில்லை” என்று கூறியிருக்கிறார் திரு. அழகிரி. இலங்கைத் தமிழர்கள் அழியக் காரணமாக இருந்த மத்திய அரசுக்கு உறுதுணையாக இருந்ததையும், பெட்ரோல் மற்றும் டீசல் விலை நிர்ணயிக்கும் அதிகாரத்தை எண்ணெய் நிறுவனங்களுக்கு மத்திய அரசு வழங்கி விலைவாசி உயர்விற்கு வித்திட்டதற்கு உறுதுணையாக இருந்ததையும், “மக்கள் சேவை” என்று குறிப்பிடுகிறார் போலும்! இது குறித்து திரு. கருணாநிதி கருத்துத் தெரிவிக்கவில்லையே! தி.மு.க. செயற்குழுவில் பேசிய தி.மு.க. பொதுச் செயலாளர் திரு. க. அன்பழகன், மத்தியில் ஆட்சியைக் கவிழ்க்க தி.மு.க. துணை போகாது என்று பேசியிருக்கிறார். இதை திரு. கருணாநிதி கேட்டுக்கொண்டு வாய்மூடி மௌனியாகத்தான் இருந்தார். இந்த விஷயங்களில் எல்லாம் திரு. கருணாநிதி மௌனம் சாதிப்பதைப் பார்த்தால், மத்திய அரசுடனான தொடர்பை எவ்விதத்திலும் துண்டிக்க திரு. கருணாநிதிக்கு விருப்பமில்லை என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மறைமுக உறவைத் தொடர்ந்து கொண்டு தியாகம் செய்துவிட்டதுபோல் வெளி வேஷம் காட்டி, தமிழக மக்களை ஏமாற்றப் பார்க்கிறார். இதைவிட தமிழக மக்களுக்கு செய்யும் துரோகம் வேறு எதுவும் இருக்க முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி)

இலங்கை அரசின் தமிழர்களுக்கு எதிரான கொடூர நடவடிக்கைகளினால் தமிழ்நாட்டில் வாழும் மக்கள் இயற்கையாகவே வெறுப்பும், கோபமும் அடைந்துள்ள சூழ்நிலையில், இலங்கை நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள், நடுவர்கள் மற்றும் அதிகாரிகளை உள்ளடக்கிய ஐ.பி.எல். கிரிக்கெட் போட்டிகள் தமிழ்நாட்டில் நடத்தப்படக்கூடாது என்று பாரதப் பிரதமருக்கு நான் கடிதம் எழுதினேன். தமிழ்நாட்டில் நடக்கவிருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை நாட்டைச் சேர்ந்த வீரர்கள், நடுவர்கள் மற்றும் அதிகாரிகளை அனுமதிக்க வேண்டாம் என்று ஐ.பி.எல். அமைப்பாளர்களை வற்புறுத்துமாறு இந்திய கிரிக்கெட்

கட்டுப்பாட்டு வாரியத்திற்கு மத்திய அரசு அறிவுரை வழங்க வேண்டுமென்றும் அந்தக் கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளேன். இலங்கை நாட்டைச் சேர்ந்த கிரிக்கெட் வீரர்கள், நடுவர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்க மாட்டார்கள் என்ற உத்தரவாதத்தை ஐ.பி.எல். அமைப்பாளர்கள் அளித்தால் மட்டுமே ஐ.பி.எல். விளையாட்டுப் போட்டிகள் தமிழ்நாட்டில் நடைபெற தமிழக அரசு அனுமதிக்கும் என்றும் அந்தக் கடிதத்தில் தெரிவித்திருந்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனது வேண்டுகோளினைப் பரிசீலித்த ஐ.பி.எல். ஆட்சிமன்றக் குழு, சென்னையில் நடைபெறவிருக்கும் விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை நாட்டைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்க மாட்டார்கள் என்று முடிவெடுத்து, இதுகுறித்த ஆலோசனையை அணிகளின் உரிமையாளர்களுக்குத் தெரிவிப்பதென தீர்மானித்துள்ளது. இது, இலங்கைத் தமிழர்களின்பால் எனது தலைமையிலான அரசு கொண்டுள்ள உணர்வுபூர்வமான ஈடுபாட்டிற்குக் கிடைத்த மிகப் பெரிய வெற்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

இருப்பினும், ஐ.பி.எல். போட்டிகளில், பங்கேற்க உள்ள அணிகளில், திரு. கருணாநிதியின் பேரன் திரு. கலாநிதி மாறனுக்குச் சொந்தமான சன் குழுமத்தின் சன் ரைசர்ஸ் (Sun Risers) கிரிக்கெட் அணியும் ஒன்று என்பதை இந்தத் தருணத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். இந்த அணியின் தலைவரே இலங்கை நாட்டைச் சேர்ந்த திரு. குமார் சங்ககாரா, (Kumar Sangakkara), (மேசையைத் தட்டும் ஒலி) இவரைத்தான் அணியின் தலைவராகவே திரு. கருணாநிதியின் பேரனுக்குச் சொந்தமான சன் குழுமம் தேர்ந்தெடுத்துள்ளது. இலங்கை நாட்டைச் சேர்ந்த திரு. திசாரா பெரேரா (Thisara Perera) என்ற மற்றொரு வீரரும் இந்த அணியில் இடம் பெற்றிருக்கிறார். இதை எப்படி திரு. கருணாநிதி அனுமதிக்கிறார்? ஒரு பக்கம் இலங்கைத் தமிழர்களுக்காக உருகுவதுபோல் தோற்றத்தை உருவாக்குவது; மறுபக்கம் தமிழர்களை அழித்த இலங்கை அரசுக்கு உறுதுணையாக இருந்த மத்திய காங்கிரஸ் அரசுடனும் உறவைத் தொடர்வது! டெசோ அமைப்பிற்கு புத்துயிரூட்டியுள்ள திரு. கருணாநிதி, இலங்கையில் நடைபெறவுள்ள காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா பங்கேற்கக்கூடாது என்று கூறும் திரு. கருணாநிதி, தன் குடும்ப

2013 மார்ச் 27] [செல்வி ஜெ ஜெயலலிதா]

கிரிக்கெட் அணியில் இலங்கை வீரர்கள் இடம் பெற்றிருப்பது குறித்து வாய் திறக்காமல் இருப்பது சுயநலத்தின் உச்ச கட்டம். (மேசையைத் தட்டும் ஒலி) ஏன் இந்த இரட்டை வேடம்? ஏன் இந்த இரட்டை முகம்? திரு. கருணாநிதியின் இந்த இரட்டை வேடத்தை மக்கள் நன்கு புரிந்துதான் வைத்துள்ளார்கள்.

பிற்பகல் 12–20

என்னைப் பொறுத்தவரையில், இந்த அரசைப் பொறுத்தவரையில், இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடத்தப்பட்ட இனப் போரை ஆரம்பத்திலிருந்து எதிர்த்து வந்திருக்கிறோம். இந்திய அரசு இலங்கைத் தமிழர்களை அழிக்க ஆயுதங்களை அளித்ததிலிருந்து, பயிற்சிகளை அளித்ததிலிருந்து அதற்கு எதிர்ப்பு தெரிவித்து வந்திருக்கிறோம். நான் மூன்றாவது முறையாக ஆட்சிப் பொறுப்பை ஏற்றவுடன், இலங்கையில் போர்க் குற்றங்களை நிகழ்த்தியவர்களைப் போர்க் குற்றவாளிகள் என்று பிரகடனப்படுத்த ஐக்கிய நாடுகள் சபையை இந்திய அரசு வலியுறுத்த வேண்டுமெனவும், இலங்கை முகாம்களில் உள்ள தமிழர்கள் அனைவரும், தங்களது சொந்த இடங்களுக்குத் திரும்பி, சிங்களர்களுக்கு இணையாக கண்ணியமாக வாழ வகை செய்யும் வரையில், அனைத்துக் குடியுரிமைகளையும் தமிழர்கள் பெறும் வரையில், மற்ற நாடுகளுடன் இணைந்து இலங்கை அரசின்மீது பொருளாதாரத் தடையை விதிக்க இந்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் வலியுறுத்தி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி, (மேசையைத் தட்டும் ஒலி) அதை மத்திய அரசுக்கு அனுப்பி வைத்தேன். ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் ஆகக்கூடிய நிலையிலும், மத்திய அரசு எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இதுமட்டுமல்லாமல், இலங்கை இராணுவ வீரர்களுக்குத் தமிழ்நாட்டில் பயிற்சி அளிப்பதைத் தடுத்து நிறுத்தினேன். இந்தியாவில் எங்கும் அவர்களுக்குப் பயிற்சி அளிக்கக்கூடாது என்று பாரதப் பிரதமரை வலியுறுத்தினேன். இலங்கை நாட்டைச் சேர்ந்தவர்கள் தமிழ்நாட்டில் நடைபெறும் எந்த விளையாட்டுப் போட்டிகளிலும் கலந்துகொள்ள அனுமதிக்கக்கூடாது என்று உத்தரவிட்டேன். இலங்கை நாடு பங்கேற்கும் தெற்காசிய தடகளப்

போட்டிகளைத் தமிழகத்தில் நடத்த அனுமதிக்க முடியாது என்று தெரிவித்து, அந்தப் போட்டியை நடத்துவதையே தமிழகம் கைவிட்டு விட்டது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

மேலும், இலங்கையில் இந்த ஆண்டு நவம்பர் மாதம் நடைபெறவுள்ள காமன்வெல்த் மாநாட்டில் இந்தியா கலந்து கொள்ளக்கூடாது என்று வலியுறுத்தி பாரதப் பிரதமருக்குக் கடிதம் எழுதியுள்ளேன். சென்ற ஆண்டு இலங்கை அரசுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு அமெரிக்கா கொண்டு வந்த தீர்மானத்திற்கு ஆதரவாக வாக்களிக்குமாறு மத்திய அரசை வலியுறுத்தினேன். அமெரிக்கா கொண்டு வந்த ஓரளவு வலுவான தீர்மானத்தை நீர்த்துப் போகச் செய்து, அந்தத் தீர்மானத்திற்கு ஆதரவாக மத்திய காங்கிரஸ் அரசு வாக்களித்தது.

இந்த ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழு முன்பு தீர்மானம் ஒன்றை அமெரிக்கா கொண்டு வந்தபோது, அதற்கு வலுவூட்டும் விதமாக இந்தியா என்னென்ன திருத்தங்களை அளிக்க வேண்டுமென்று பாரதப் பிரதமருக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தேன். இந்தத் திருத்தங்களையெல்லாம், 19–3–2013 அன்று இறுதி வரைவுத் தீர்மானம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பு கொண்டு வருவதற்கான நடவடிக்கையை எடுத்து, மனித உரிமைகளுக்குக் குரல் கொடுக்கும் நாடாக இந்திய நாடு விளங்க வழிவகை செய்ய வேண்டுமென்று நான் பாரதப் பிரதமருக்குக் கடிதம் வாயிலாகக் கேட்டுக்கொண்டேன்.

இதுமட்டுமல்லாமல், இந்த ஆண்டு மேதகு ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின்மீதான விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசியபோது, ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைக் குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு எதிரான தீர்மானத்தை அமெரிக்கா இந்த ஆண்டு கொண்டு வருவது ஒருபுறம் இருந்தாலும், தமிழர்கள் நலன் கருதி தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் அடிப்படையில் ஒரு தீர்மானத்தைக் கொண்டுவந்து, அதை மற்ற நாடுகளுடன் இணைந்து நிறைவேற்ற வேண்டுமென்றும் மத்திய அரசை நான் கேட்டுக் கொண்டேன். ஆனால், இதையெல்லாம் தி.மு.க. அங்கம் வகித்த மத்திய அரசு கண்டுகொள்ளவில்லை.

2013 மார்ச் 27] [செல்வி ஜெ ஜெயலலிதா]

இந்தச் சூழ்நிலையில், இலங்கை அரசின் மனிதாபிமானமற்ற, ஈவு இரக்கமற்ற, மனித நேயமற்ற செயல்களை, போர்க் குற்றங்களை, இனப் படுகொலைகளைக் கண்டித்து, கல்லூரி மாணவ, மாணவியர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். மாநிலம் முழுவதும் சுமார் நூற்றுக்கும் அதிகமான கல்லூரிகளில் மாணவ, மாணவியர் வகுப்புகளைப் புறக்கணித்து, நூற்றுக்கணக்கான மாணவ, மாணவியர் பல்வேறு இடங்களில் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். மேலும், மாணவ, மாணவியர் 210 இடங்களில் ஆர்ப்பாட்டம், 110 இடங்களில் ஊர்வலம், 68 இடங்களில் சாலை மறியல், 31 இடங்களில் இரயில் மறியல், 24 இடங்களில் உருவ பொம்மையை எரித்தல் ஆகிய போராட்டங்களிலும் ஈடுபட்டனர்.

எனது தலைமையிலான அரசால் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம், இலங்கைத் தமிழர்கள் பிரச்சினை தொடர்பாக மத்திய அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் குறித்து பாரதப் பிரதமரை வலியுறுத்தி நான் எழுதியுள்ள கடிதங்கள் மற்றும் இலங்கைத் தமிழர்களுக்கு ஆதரவாக எனது தலைமையிலான அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் ஆகியவற்றை பிரதிபலிக்கும் விதமாகத்தான் மாணவ, மாணவியரின் போராட்டம் அமைந்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வுகளை வெளிப்படுத்தும் விதமாக அமைந்துள்ளதுதான் இந்தப் போராட்டம். அரசியலுக்கு சிறிதும் இடமளிக்காமல், இலங்கைத் தமிழர் நலன் ஒன்றையே கருத்திற்கொண்டு, உன்னதமான குறிக்கோளுக்காக அறவழியில் நடத்தப்படும் இந்தப் போராட்டம் இலங்கைத் தமிழர் நலனுக்கான அர்ப்பணிப்பின் வெளிப்பாடு.

பிற்பகல் 12—25

இவ்வளவு உணர்வுபூர்வமான போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், எதிர்ப்புகள் தமிழகத்தில் தொடர்ந்து நடைபெற்று வருகின்ற சூழ்நிலையிலும், இலங்கை அரசு இலங்கைத் தமிழர்களைத் தொடர்ந்து இரண்டாம் தர குடிமக்களாகவே நடத்தி வருகிறது. போரினால் இடம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்கள், முகாம்களிலும், சிறைச்சாலைகளிலும் அடைக்கப்பட்டுள்ளனர். தங்களுடைய சொந்த நாட்டிலேயே இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வாழ்ந்து வரும் அவல நிலைமை நீடிக்கிறது. இதுமட்டுமல்லாமல், தமிழர்கள்

*வசித்த பகுதிகளில் சிங்களர்களை இலங்கை அரசு குடியமர்த்தி வருகிறது. தமிழர் வழிபாட்டுத் தலங்கள் அகற்றப்படுகின்றன. மொத்தத்தில் ஓர் இனவெறி இலங்கையில் தாண்டவமாடிக் கொண்டிருக்கிறது. இவற்றையெல்லாம் தட்டிக் கேட்க வேண்டிய மத்திய அரசு, தமிழர்களின் உணர்வுகளுக்கு, தமிழக அரசின் கோரிக்கைகளுக்கு சற்றும் மதிப்பளிக்காமல் பாராமுகமாக இருந்து வருவது மிகுந்த வருத்தத்தை அளிக்கிறது.*

## 3. அரசினர் தனித் தீர்மானம்

### இலங்கையை 'நட்பு நாடு' என்று கருதாமல், தமிழினப் படுகொலையை போர்க் குற்றமாகக் கருதி, குற்றம் புரிந்தவர்களுக்கு உரிய தண்டனை கிடைக்கவும், பொருளாதாரத் தடை விதித்திடவும், 'தனி ஈழம்' குறித்து பொது வாக்கெடுப்பு நடத்திடவும், ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புக் குழுவில் தீர்மானத்தைக் கொண்டு வர மத்திய அரசை வலியுறுத்துதல்

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *இந்தச் சூழ்நிலையில், ஒட்டுமொத்த தமிழர்களின் உணர்வுகளை மத்திய அரசுக்கு மீண்டும் எடுத்துரைக்கும் வகையில் கீழ்க்காணும் தீர்மானத்தினை தமிழக அரசின் சார்பில் நான் முன்மொழிகிறேன்:*

#### தீர்மானம்

*"தமிழன் யாருக்கும் தாழாமல் – யாரையும் தாழ்த்தாமல், எவரையும் சுரண்டாமல் – எவராலும் சுரண்டப்படாமல், எவருக்கும் எசமானனாக இல்லாமல் – உலகில் எவருக்கும் அடிமையாக இல்லாமல் நல்வாழ்வு வாழ வேண்டும் என்பதே எங்களது தலையாய கொள்கை" என்றார் பேறிஞர் அண்ணா. (மேசையைத் தட்டும் ஒலி) பேரறிஞர் அண்ணா அவர்களின் பொன்மொழிக்கேற்ப, இலங்கைவாழ் தமிழர்களுக்கு நல்வாழ்வு ஏற்படுத்தித் தர வேண்டும் என்பதைத் கருத்திற்கொண்டு, இலங்கை நாட்டை 'நட்பு நாடு' என்று சொல்வதை இந்திய அரசு நிறுத்திக் கொள்ள வேண்டும் என்றும்; (மேசையைத் தட்டும் ஒலி) இலங்கை இனப் போரின்போது நிகழ்த்தப்பட்ட இனப் படுகொலை மற்றும் போர்க் குற்றங்கள் குறித்து சுதந்திரமான, நியாயமான சர்வதேச புலன் விசாரணை நடத்திடவும்; (மேசையைத் தட்டும் ஒலி) இந்த சர்வதேச*